தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு	மலர்,
ருரு	உ௰கக சித்தார்த்தி மாசி 1980 பிப்ரவரி, மார்ச்	கக

பரிப் பெருமாள் - ஒரு மதிப்பீடு

கு. சிவஞானம், எம். ஏ.,
தமிழ் வளர்ச்சி அலுவலர்,
திருச்சி.

1

முன்னுரை :

'' மணக்குடவர் உரையைத் திருத்தியும் மாற்றியும், கூற்று முதலியன சேர்த்தும், அங்காங்கு விளக்க உரைகளோடு விளங்குவது பரிப் பெருமாள் உரை.'' 1

இவ்வாறு வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள், தம் திருக்குறள் உரைக்கொத்து முன்னுரையில் அருளுகின்றார்கள்

பெரும்பான்மையும் மணக்குடவர் உரையைப் பின்பற்றியும் சிறுபான்மை மாறுபட்டும் பரிப் பெருமாள் உரை வகுத்துள்ளார், என்று கொள்ள நேரிடுகின்றது. எனவே, பரிப்பெருமாள் அவர்களின் தனித்தன்மை யாது என்பதை ஆய்வது இந்நூலின் நோக்கம் ஆகும்.

எனவே பிறர் எழுதியுள்ள உரைகளும் ஒப்பு நோக்கி விளக்கப் படுகின்றன.

முதலில் காமத்துப்பால் உரைகளும் விளக்கங்களும் ஒப்பு நோக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

---

(1) திருக்குறள் உரைக்கொத்து, காமத்துப்பால், ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள் 1970.

ஓர் உரையாசிரியரின் தனித்தன்மை யாது என்பதைக் கண்டு உண்மை உணர்தலே இதன் நோக்கம். அவர் பிறரினும் திறம் உடையவர் என்பதை நிலை நாட்டுவது இல்லை.

2

காமத்துப்பால் முன்னுரை :

காமத்துப் பாலுக்கு அமைந்த முன்னுரைகளில் மிகப்பெரிதாக அமைந்து உள்ளது பரிப்பெருமாள் விளக்கம் ஆகும்.

மணக்குடவர் பரிமேலழகர் ஆகிய இருவரின் முன்னுரைகள் விளக்கமாக அமைந்து உள்ளன

காமத்துப்பால் — விளக்கம் :

காமத்துப்பால் என்பதற்கு இன்பப் பகுதி என்பது பரிப்பெருமாள் விளக்கம் ஆகும், காமம் - இன்பம். பால் - பகுதி.

காலிங்கர் 'காமப் பகுதி' எனக் கூறுகின்றார். மணக்குடவர் அதிகாரப் பெயருக்குப் பொருள் சொல்லவில்லை. பரிமேலழகர், "இன்பம் கூறுவான் எடுத்துக்கொண்டார்", என்று கூறுகின்றனர். எனவே, காமம் என்பதற்கு இன்பம் என்றே இருவரும் பொருள் கொண்டார் என்பது விளங்கும்,

இன்பம் :

மைந்தர்க்கும் மகளிர்க்கும் கலவியால் ஆகியது இன்பம் என்று இன்பத்திற்கு விளக்கம் கூறுகின்றார் பரிப்பெருமாள் மணக்குடவர் விளக்கம் கூறவில்லை.

இங்கு இன்பம் என்பது 'காம இன்பம்' எனப் பரிமேலழகர் விளக்கம் தருகின்றார், பரிப்பெருமாள் கூறிய 'கலவி இன்பம்', பரிமேலழகர் கூறிய 'காம இன்பம்' என்ற இரு தொடர்களும் ஒரே பொருள் உடையவை ஆகும்.

இன்பம் நுகரும் இடம் :

கன்னியர், கணிகையர், பிறர் தாரம் ஆகிய மூவரும் ஒருவனுக்கு இன்பம் நுகர்தற்கு உரிய இடம் என்று கூறுகின்றார் பரிப்பெருமாள். இடம் பற்றிய விளக்கத்தில் பிறர் ஈடுபடவில்லை.

தகை அணங்குறுத்தல் என்ற அதிகார விளக்கத்தில் இன்பம் நுகர்தற்குரிய இடம்பற்றிய விளக்கத்தை மணக்குடவர் உரைக்கின்

றார். அதிகார விளக்கத்தில் பின்னர் இருப்பதைவிடப் பால் விளக்கத்தில் முன்னர் இக்கருத்தினைக் கூறுதலே பொருத்தம் உடையது எனக்கருதிப் பரிப்பெருமாள் இதனை முற்கொணர்ந்து கூறி உள்ளார்.

இன்பம் நுகர்தற்குரிய இடம் பற்றிய பரிப்பெருமாள் விளக்கத்தை இனிக்காண்போம்.

வள்ளுவர் கூறி உள்ள இடங்கள்:

பிறர் மனையைக் கூடுதல் பாவம் தரும் என்று அறத்துப் பாலிலும், கணிகையரைக் கூடுதல் பொருட்கேட்டைத் தரும் என்று பொருட்பாலிலும் வள்ளுவர் கூறி உள்ளார். 'அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர் கூட்டம்.' எனவே, காமத்துப் பாலில் வள்ளுவரால் கூறப்பட்டது 'கன்னியர் கூட்டம்'.

பிறனில் விழையாமை (அறத்துப்பால்), வரைவின் மகளிர் (பொருட்பால்) என முன்னர் விலக்கப்பட்ட கலவி இன்பத்தை இங்குத் தொடர்புபடுத்திக் காட்டி, காமம் நுகர்தற்கு உரிய இடமாகக் கன்னியரையே காமத்துப்பாலில் வள்ளுவர் கூறினார் எனப் பரிப்பெருமாள் வரையறுப்பது சிறப்பாக உள்ளது. எனினும் இவ் விளக்கம் தகையணங் குறுத்தல் என்ற அதிகார விளக்கத்தில் மணக்குடவரால் உரைக்கப்பட்டவையே. அதைப் பரிப்பெருமாள் அப்படியே எடுத்து ஆளுகின்றார். என்றாலும், இத்துடன் நிறுத்தாது, மேலும் அவர் சில விளக்கங்கள் தருகின்றார். அவை அவரின் புலமைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

கன்னியர் கூட்டத்தின் வகை:

பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், கிராக்கதம், பைசாசம், என எட்டு வகைப்படும். இவற்றுள் முதல் மூன்றும் ஒருதலைக் காமம். பின் நான்கும் ஒப்பில் கூட்டம். இவை இன்பச் சிறப்பு இல்லாதவை. எனவே வள்ளுவர் கூறுவது, 'காந்தருவ நெறி' என்ற வகையைச் சேர்ந்தது எனக் கொள்ள வேண்டும் என்பது பரிப்பெருமாள் கருத்து.

'ஒப்பில் கூட்டம்' எனப் பெருந்திணையை விளக்க இவர் பயன்படுத்தி உள்ள தொடர் சிந்திக்கத் தக்கது.

> "முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே
> பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே." (2)

---

2) தொல் களவியல், 14.

காமக் கூட்டம் காணுங் காலை
மறைஓர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே. (3)

என்ற தொல்காப்பிய நூற்பாக்களையும் இவர் இங்கு எடுத்துக் காட்டுகின்றார்.

காந்தருவம் — விளக்கம் :

'கொடுப்போரும் அடுப்போரும்' இன்றித் தலைவனும் தலைவியும் தாமே கூடுவது காந்தருவம் என்பது இவர் தரும் விளக்கம் ஆகும். இங்குத் தலைவன் தலைவியரை ஒத்தார் (5) என்ற சொல்லால் அவர் குறிப்பிடுகின்றார். "ஒத்த கிழவனும் கிழத்தியும்" (6) என்ற தொல்காப்பிய நூற்பாத் தொடரைக் கருத்தில் கொண்டு இவ்வாறு ஒத்தார் எனக் கூறினாராதல் வேண்டும்.

இனி, தாமே கூடும் கூட்டமே காந்தருவம் என்பதற்கு இவர் களவியல் சூத்திரத்தை எடுத்துக்காட்டாகத் தருகின்றார்.

'தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்', (7)

நாடக வழக்கு :

மேற் குறிப்பிட்ட களவியல் சூத்திரம் "நாடக வழக்கிற்குக் கூறியது" என்பது இவர் கருத்து.

இனி, நாடக வழக்குக் கூறுவதாக இவர் எண்ணும் நூற்பாவை இங்கு எடுத்துக்காட்டி உள்ளமையால், வள்ளுவர் கூறும் காமத்துப் பாலும் நாடக வழக்கு என இவர் கருதுகின்றாரா என்ற வினா எழுகின்றது. இவ்வினாவை அவரே எழுப்பிக்கொண்டு விடையும் கூறுகின்றார்.

காமத்துப்பால் நாடக வழக்கா ?

உரையாசிரியர் இச்சூத்திரத்திற்கு விளக்கம் கூறும் பொழுது உலகத்தோடு ஒத்தும் ஒவ்வாதும் வரும் என்று பொதுப்படக் கூறி உள்ளார். அதனால் இச்சூத்திரத்தை உலக வழக்கை நோக்கி இங்குத் தாம் எடுத்துக்காட்டியதாகக் கூறுகின்றார்.

---

3) தொல் களவியல் 1.
5 "ஒத்தார் இவர் தாமே கூடுங் கூட்டம்". பரிப்பெருமாள்
6.
7.

எனவே, வள்ளுவரின் காமத்துப்பால் ‘உலக வழக்கை’ உணர்த்துவன என்பது பரிப்பெருமாள் கருத்தாகும்.

உரையாசிரியர் யார் ?

உரையாசிரியர் என இவரால் குறிக்கப்பட்டவர் யார் ?

இறையனார் களவியல் உரையாசிரியர் இச்சூத்திரத்திற்கு விளக்கம் கூறும் பொழுது, நாடக வழக்கு உலகியல் வழக்கு ஆகியவை பற்றிய ஆய்வில் ஈடுபட வில்லை. எனவே, உரையாசிரியர் என்பது இச்சூத்திரம் இடம்பெற்றுள்ள இறையனார் களவியல் உரையாசிரியரைக் குறிப்பதாகக் கொள்வதற்கு இல்லை.

‘புணர்ச்சியைக் களவு என்றும் பிரிவைக் கற்பு என்றும் பெரும் பான்மை பற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுகின்றார்.’ எனத் தம் முன்னுரையில் பரிமேலழகர் கூறுகின்றார். ‘உலகத்தோடு ஒத்தும் ஒவ்வாதும் வரும்’ என்று உரையாசிரியர் கூறுவதாகப் பரிப்பெருமாள் காட்டிய வரிகள் பரிமேல் அழகர் விளக்கத்தில் இடம் பெற்று உள்ளது. பரிமேல் அழகரின் விளக்கத்தையே பரிப்பெருமாள் உரையாசிரியர் கூறியதாகக் காட்டுவதாகக்கொள்ள இடமுண்டா ? உரையாசிரியர் என்பது பரிமேல் அழகரைக் குறிப்பது ஆகுமா ?

“ இச்சூத்திரம் கூறுகின்றுழி ”......

எனப் பரிப்பெருமாள் தொடங்குகின்றார். பரிமேல் அழகர் சூத்திரத்திற்கு விளக்கம் கூற வில்லை. காமத்துப் பாலுக்கு விளக்கம் கூறுகின்றார். எனவே, பரிப்பெருமாள் ‘ உரையாசிரியர் ’ என்று குறிப்பிடுவது பரிமேல் அழகரை அன்று.

உலக நடை :

சூத்திரத்திற்குப் பொருள் கூறும் பொழுது, உலகத்தோடு ஒத்தும் ஒவ்வாதும் வரும் என்று பொதுப்படக் கூறியதனால், தாம் இதனை உலக வழக்கை நோக்கி எடுத்துக்காட்டியதாகப் பரிப்பெருமாள் தெரிவிக்கின்றார், எனவே காமத்துப்பால் உலக நடையை ஒத்துக் கூறுகின்றது எனப் பரிப்பெருமாள் கருதியதாகக் கொள்ளலாம். ஆனால் காமத்துப்பால் உலக நடையுடன் (8) ஒத்தும் ஒவ்வாதும் கூறப்பட்டு உள்ளது என்றும் அவ்வாறு ஒவ்வாது

---

8. ...... “ சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுகின்றார்.”

— பரிமேலழகர்

கூறுவது சுவை மிகுதி பயக்க வேண்டும் என்பதற்காக என்றும் பரிமேலழகர் உரைக்கின்றார். இருவர் கொள்கைக்கும் உள்ள இந்த நுணுக்கமான வேறுபாடு கருதத் தக்கது.

அராகத்தார் :

காமப் புணர்ச்சியை வடநூல் ஆசிரியர் அராகத்தார் கூடும் கூட்டம் என்பர் எனப் பரிப்பெருமாள் உரைக்கின்றார். அராகத்தார் யார்?

(தொடரும்)

உ

அபிராமி சமயம்

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

[துணர் ருங, மலர் அ. பக்கம் 126-ன் தொடர்ச்சி]

துவைதம் வழியாக அத்வைதமுடிபினை அடைய அபிராமி சமயம் எளிதான பக்தி சாதனத்தை வழிபாட்டு முறையில் வற்புறுத்துகிறது. இப்பக்திச் சாதனமொன்றே, அறிவு, விழைவு, செயல் எனும் மூன்றுலும் அயரா அன்போடு, ஞான இன்பமாய் நிலவும் இறைவிபால் அழுந்தி நிற்கச் செய்யும். இறைவியின் பொருள்சேர் புகழை விருப்பி இடைவிடாது நினைத்தலையும், சொல்லுதலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது பக்தி மார்க்கம். இந்த வழிபாட்டு நெறி, சித்தியையும், பரமுத்தி நிலையையும் நல்கவல்லது. இதனுன் ஞானத்தை விரைவில் பெறும் அரிய வாய்ப்புளதென்றும் அபிராமி சமயம் அறை கூவுகிறது. துவைதத்தில் தொடங்கும் வழிபாட்டு நெறிக்குரிய பக்தி மார்க்கம், இறைவியருளால் மிக்கதோர் ஞான பலனை விரைவில் அளித்து, அத்வைதத்தில் தானுகவே முடிந்துவிடுகிறதென்பதை அபிராமி சமயம் தெளிவடையச் செய்கிறது, மற்றும் தூய ஞானவுணர்வு, தூய பக்தி ஆகிய சாதனத் தொடர்புகளால் பெறப்படும் ஆன்மபோதத்தையும் ஆன்ம தரிசனத்தையும் வாழ்வில் அபிராமி சமயம் சித்தாந்தப்படுந்திவிடுகிறது.

அகத்தேயும் புறத்தேயும் சார்ந்து நிற்பவைகளை அடக்கி ஒப்பற்ற உண்ணிறைந்த தெய்வத்துவத்தை வெளிப்படுத்துவது அபிராமி சமயத்தின் உண்மைத் தத்துவமாகும். இதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது தெள்ளத் தெளிவோடு கூடிய தளர்வறியா மனமாகும் (69). அகக்கரணமாகிய மனம் சலிப்பின்றி

உறுதிப்பாடுடைய வலிமையும் ஒருமையும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் தான், தனது என்பனவற்றை முறையாக தியாகமும் செய்தல் இன்றியமையாதது. அதுபோதுதான் மனத்தின் கூட்டாளிகளாகிய புத்தியும் சித்தமும், அகங்காரமும் அடங்கி நிற்க, மோனத்தை புறக்குறியாகக் கொண்ட மனவுணர்வுநிலை கவின் பெறுவனப்புடன் பேரின்பவூற்றாக வயங்கி பெரும் பயனை அளிக்க வல்லதாய்த் திகழும், இறைவியின் நினைவாக அன்போடியைந்து இருக்கும் பண்பட்ட மன வியல்பு, பக்தி, புலனடக்கம், நல்லொழுக்கம் ஆகியவற்றால் சத்துவ குணத்து மணங்கொண்டு அதனையுடையாரை இறைவிபால் தோய்ந்து நிற்கச் செய்யும். இவ்வாறு சிந்தையினை அடக்கி சும்மா நிற்கின்ற நிலை கை கூடுதல் அரிதிலும் அரிது. இவ்வமயத்தில் ' நாம் உடலுமல்ல, மனமுமல்ல என்றும், அவ்வையிரண்டிற்கும் அப்பாலாய் உள்ள பேரின்பச் சுடர் ' என்ற உண்மையியல்கின் எழும் எண்ணம் உள்ளத்தே தெய்வ இயலோடு நன்கு பதியும். மனம், தெய்வீக சாந்தியிலே ஆழ்ந்து கலந்து நிற்க அக்கணத்தில் தெய்வக் கவர்ச்சியெனும் உணர்ச்சிப் பெருக்கிலிருந்து தப்பித்துக்கொள்ள இயலாத நிலை அதனைச் சூழ்ந்து நிற்கும். யாவும் அவள் மயமாய் அனைத்தும் ஆனதும் அவளே என்ற அனுபவத்தில், அவளன்றி ஓர் அணுவும் அசையாதெனப்பட்டாங்கறியும் ஞானக்காட்சியும் புலனும். புலனாகவே ஆன்மா, தூயநிலை கொண்டு அருளோடு ஒன்றி நிற்கும் துரிய அருளை நிலைவழி துரியாதீத ஆனந்த நிலையினை யெய்தி இறைவியைப் பற்றாகப் பற்றி உலகத் தொடர்பினை நீக்கிக்கொள்ளும். இத்தகையவாறு ஆன்மாவில் திருவருட் கலப்புடன் வாழ்வதே இறவாமையாகும். இஃதே பட்டர் கண்டு கொண்ட அபிராமி சமயத்தின் அனுபவ உட்கோளாகும். இதனால், இறைவியை நாடும் நோக்கம் 'தனக்கு நாளும் மனத்தில் வேரூன்றியிருக்க வேண்டுமாறு அருளுக' என்பது பட்டாது பிரார்த்தனையாகும். இவ்வாறு இறைவியிடத்தில் பேரன்பு மீதூர்ந்து நாடின், தனம், கல்வி, இறையுரு, மனபரிபாகமொடு நல்லன அனைத்தும் தானே வரும் என்பதும் அவரது உபதேச மொழியாகும்.

' தனந்தரும் கல்விதரும் ஒருநாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாளபிராமி கடைக்கண்களே. (69)

அபிராமி சமயத்தின் மெய்ப்பயன் பெரும்பாலும் சன்மார்க்க சாதகர்களுக்கு அன்றாது துன்பத் துயர்களை நீக்கி, பெரும் நயனை அளிக்கும். இச்சமயம் தீராத மனக் கவலைகளைத் தீர்த்து மயக்க

மாகிய விகற்பங்களேயும் மனத்துரிசுகளேயும் போக்க வைக்கும். பொய்தீர் ஒழுக்க நெறியினின்றும் வழுவாத்திறத்தையும் பெறச் செய்யும். அன்னேயின் திருவருளால் கலேமகள் நாவில் நயந்து மகிழ் வாள்: திருமகள் மண்ணுலகை ஆளும் செல்வத்தை மகிழ்ந்து அளிப்பாள்: நவக் கோள்கள் களிப்புடன் நட்பாய் விளங்கி நிற்க, வந்திடும் கூற்றும் வணங்கி ஏகும். ஊழையும் உப்பக்கம் கண்டு வெல்லலாம். வாழுமுயிர்கள் தம் அருவினேகளேத் திருவினேகளாக ஆக்க முயன்று இறைவியின் பணியில் ஈடுபடுங்காலே, இறைவி அவ்வூழை அவ்வுயிர்கள் பால் வந்து சாராது, சந்திக்கவைத்து, அவ்வூழையும் வலியிழக்கும்படியான வகையினேச் செய்துவிடும். வாழ்க்கைப்பயனுகிய மரணமிலாப் பெருவாழ்வு வந்தெய்தும், இதனுன் சாலோக முதலாய சுகானந்தப் பதவிகளேக் குலேயாத அமைதியோடு பொலிவுறப் பெறலாம்; சமய வேறுபாடுடைய கருத்துக்கள் அகலும்; தீவினே வாதியாது ஒழியும்; மும்மை தரும் வினேகள் மூளாவாம், மக்கள் அறியாமையாற் விழையும் பிழைகளே யும் ஐம்புலன்களால் அணேந்திடும் பிழைகளேயும் போக்கி, அபிராமி சமயம் அபயம் அளித்து மக்களேப் பரிந்து காக்கும் பான்மைத்து. மற்றும் இறைவியை உள்ளன்பாலும் மெய்யறிவாலும் சிந்திக்கும் திருபெருகிடின், இறைவியின் சங்கற்பத்தினுல் உலகுயிர்களின் அமைதியின் மலர்ச்சி தவப் பயனுடன் மன்னி நிற்கும் எனும் தத்து வத்தை இச்சமயம் உணர்த்தும் பெற்றிமைவாய்ந்தது. எனவே 'இக்காரணங்களான், மேன்மைகொள் 'அபிராமி சமயம் நன்றே' (94) என விவேகத்துடன் செவ்விதிற்றெளித்தார், அச்சமயத்துச் செவ்வழியினேத் தெரிக்கும் அபிராமி அந்தாதியையல்லாது மற்றெ தனேயும் மெய்யகத்தே ஆராத அன்புடன் மகிழ்ந்து கற்பரோ!

அபிராமி சமயத்துக்கு, இயற்கையென்பது, பரை அறிவுத் தத்துவமாகும். இயற்கை அளிக்கும் உண்மையாய அபேத ஞானத்தை இயற்கையிலிருந்து முறையாய் பயில வேண்டுமென் பது அச்சமயத்து மரபு, இறைவி இயற்கையுடன் கலந்துள்ள நிலே, வழிபாட்டிற்குரிய புகழ்ச்சிக்குரியது. கைபுனேந்தியற்ற இயற்கை யழகில் தோய்ந்தோறும் இயற்கையன்னேயின் செழுஞ்சோதி வனப் பெல்லாம் ஒரு சேரக்காண, களிப்பு தோன்றும்: தோன்றுங்கால் அளப்பரிய சக்தியின் உண்மை விளக்கமும் மொய்ம்பும் புலனுகும். கீட்ஸ் (Keats) எனும் மேற்புலக் கவிஞர் அழகே உண்மையென்றும், உண்மையே அழகென்றும் (Beauty is Truth: Truth is Beauty) புலப்படவிதந்து கூறியுள்ளது அபிராமி சமயத்துக்கு பொருந்துவ தாகவுமுள்ளது. இயற்கையன்னேயின் எழிலில், ஒருமையுள்ளமொடு போற்றி வழிபடின், அழகு தெய்வத்தினே யாண்டும் கண்டுகளிக்கும்

வாய்ப்புண்டாகவே, சிந்தைபால் இயல்பாய் அத்தெய்வத்தின் உண்மை நிலை திண்மையுற்று புலன்களையும் மனத்தையும் தெய்வ அழகில் தோய்ந்து ஈடுபடும்படி வழிவகைகளைப் புலப்பட வகுத்துக் காட்டி, ஒருமைப்பாடுற்ற புலன்களையும், தளர்வறியாது உறுதி பூண்ட மனத்தையும் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிடச் செய்யும்.

இயற்கையினிடத்தே, அருளாற்றல் ஆதியாகவுள்ள அன்னை இவ்வாறு அழகுணர்ச்சியாய் பொதிந்து நீக்கமற நிறைந்து விரவியும் பரவியும், சித்தி முத்தி புத்தியாக இலங்கி, உண்மை வாயிலாக உறைகின்றதையுணர்ந்த பட்டர், அதனை விளக்குவான் பொருட்டு, இயற்கையோடியைந்த உண்மைகளை அன்னையின் சமயக் கொள்கைகளாக பாவித்துக் கொண்டார். உலகுக்கு மூலக்காரணமாகவுள்ள முழுமுதல்வியை, பொருள்களுக்கெல்லாம் மூலமாகிய ஒளியோடு ஒப்புவித்து,

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிருமொளிக்கிடமே எண்ணிலொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவளவிற் களவான ததியமே (16)

என விளிக்கின்றார். ஒளியால் அண்டங்களை ஈன்று உலகுயிரனைத்தையும் மீன்போல் செவ்வியுற நோக்கும் செவ்வியாள், எவ்வாறு அறிவுக்கறிவாய் உயிர் தொறும் உண்ணின்று அறிவிக்கும் பாண்மையினை உண்ணிப்பாய் வியந்தார்; அடியார்களது அகத்திருளைப் போக்கி ஒளியிடும் மணியாகக் கருதி, அன்னை அருட் கதிர் விளக்கும் விளக்கொளியாய் மிளிர்தலை தம்முள்ளத்திலே உறைப்ப எண்ணி, பார்க்குந் திசைதொறும் அன்னையின் திருவுருவே தோன்றுவதாகக் கண்டார். உலகின்கண்ணுள்ள பல்வேறு இடங்களில் அவைகளுக்கேற்ப பல்வகை வண்ணப் பொருள்களாக இயைந்து பூதங்களாய் பிரிந்து விளங்கும் அபிராமி அன்னையின் தன்மையினை அதிசயித்தார், எக்காலத்திலும் எந்நிலையிலும் நித்தியமாக நிலைத்து யாவற்றிற்கும் காரணமுமாகி கருணையினால் யாவையும் நல்கும் அன்னையை அருட் கதிர் விளக்கும் இளஞ் சுடர் ஒளியாகத் திகழவைத்து, அண்டங்கள் யாவும் அன்னையின் ஒளியால் மூழ்கிக் கிடப்பதைக் காண்கிறார்.

அளியார் கமலத்திலாரணங்கே அகிலாண்டமு நின்
ஒளியாக நின்ற ஒளிர் திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ஙனே மறப்பேனின் விரகினையே (82)

ஒளிமயமாகிய அன்னையை பட்டர் உள்ளுந் தோறும் அவரது அந்தக்

சரணங்கள் நான்கும் வீட்டின்ப மகிழ்ச்சி எய்திட, ஞானவிளக்கத்தை அளிக்கும் ஞாயிற்றையும் திருவருட் பேற்றினை அளிக்கும் சந்திரனையும் தாயருளே உருவான அம்மையின் இரு கண்களாகப் பாவித்துக்கொண்டார்

இயற்கை யழகில் வாழுயிர்களை உணரவைக்கும் ஈடுபாட்டில் தலையாயது மலரினங்களே. என்னெனில், உள்ளங்களுக்கும் மலரினங்களுக்குமுள்ள ஓர் தொடர்பு, ஒளி, மென்மை, வண்ணம் கவர்ச்சி மணம் என்ற உகந்த பண்பு வகையில் அமைந்து விளங்குவது கருதப்பெறும். அடர்ந்து பூத்த பல மலர்களின் செவ்வியைப் பெற்று, இறைவி பூங்கொடியாய், தாயின் இளமையோடு பல்லுயிர்களுக்கு எல்லையற்ற உவகையும் அளவற்ற மகிழ்வையும் அளிக்கத் தோற்றமளித்தாள் என பட்டர் கூறுவது உணரற்பாலது. 'அளியார் கமலத்தின் ஆரணங்கு' (82) பூவினில் நாற்றமாயும் எண்டிசைக்கும் ஒண்சுடராயும். தாமரையாகத் திகழும் நிற அழகும் மணமுங்கொண்டு 'தாமரைக் கோயிலில் வைகும் யாமளவள்ளியாய்' விளங்குதலையும் பட்டர் பாரித்துரைத்ததைக் காண்க. மற்றும் தெய்வீக ஒளி வீசும் அம்மையாரது முகத்தோற்றத்தை தாமரை மலராகப் பாவித்தும் உருவகமாக்கியும். அது மனதிற்கு அமைதிச் சிறப்பினை அளிக்கும் பக்குவத்தைப் பரிவுடன் போற்றுவாராயினார். இவ்வாறு போற்றப்படும் தாமரை. சேற்றினிலே பிறந்தாலும் அதன் சீர்மை சிதையாது போன்று, மனத்தூய்மையால் நற்குண நற்செய்கையுடையாரது பெருமை, அன்னவர் எத்தகைய தாழ்குடியிலும் கீழ் நிலையிலும் பிறந்தாலும் குன்றாரென்பதை உணருமாறு, பட்டர் அம்மையாரது தாளுக்கு தாமரை மலரினை 'பத்ம பாதம்' (41) என ஒப்புமை கூறிப் புலனாக வைத்தார். மற்றும் மக்களோடு இறைவி தொடர்பு கொண்டிருக்கும் பான்மையை தாமரைக்கு ஒப்புமை செய்து. தாமரை, நீர்நிலை உயர்ந்த போதும் தாழ்ந்த போதும் அதனோடு உறவாடியிருக்கும் நிலையாய மாண்பினையும், சகித்தல் தன்மையினையும் மக்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார். இஃதோடமையாது தாமரை இலை மீதிருக்கும் தண்ணீர்த்துளி எவ்வாறுளதோ, அஃதே போன்று உயிர் யாதொரு கறையும் படாதவாறு, வேண்டுதல் வேண்டாமையுமின்றி, அகப்புறப்பற்றுக்களைக் களைந்து உலகியல் வாழ்வில் பட்டதும் படாததுமாய் ஒழுகிக் கொள்ள வேண்டுமென்பதை நாம் குறிக்கொண்டறியும்படி உணர்த்திவிடுகிறார். இதனான் இயற்கை வாயிலாகக் கவின்பெறு வனப்புடைய இறைவியினைக்காணும் உண்மை நிலையினை நிலைபேறாக ஆக்குவித்து, எவ்வாற்றாலும் அளந்தறிய வொண்ணாத மெய்ப் பயனை குறிக்கோளாகக் கொண்டு வாழ்வில் நல்கவல்லது அபிராமி சமயம் என்பதைப்

பட்டர் குறிப்பாகக் கூறிப் போந்தார். எனவே இயற்கையோடி யைந்த பொலிவுடன் கருணை பொழியும் அம்மையின் ஒலிமயமாய புற அழகினையும். ஞானவுணர்வுமயமாய அக அழகினையும் உள்ளக் கிழியில் தீட்டி அதனை உற்று நோக்கி தனித்திருப்பதும், மோன முடன் பசி வேட்கையொடு தியானித்து இறைவியின் அருளுக்காகக் காத்திருப்பதும். அபிராமி சமயத்திற்குரிய தவநெறியாகுமென்பது உணரற்பாற்று,

அபிராமி சமயம் அறிவு நிலையையும் உணர்வு நிலையையும் செயற்படுத்தும் மாண்புற்று உலக வாழ்வுக் கேற்றதாய இயற் கைத் தன்மையோடு விளங்குகிறது. இயற்கைக்குக் கடவுள் தான் மூலப் பொருள் கடவுள் இயற்கையைக் கடந்தும், இயற்கையின் உள்ளும் திகழ்கிறார் (கட + உள்) இயற்கையினை அதன்கண்ணுள்ள மாறுபாடுகளுடன் உள்ளபடி உணர்ந்தாரே கடவுளை உண்மையாக அறியவல்லார், உலகவாழ்வுக்கு வேண்டப்படும் இருவிதத்தன்மை களாய ஆண் பெண் மயமாய அமைந்துள்ள படைப்பின் இயல்பினை, இயற்கை உலகின்கண் காணப்படும். இருமையால் விளங்கும் இவ்வுலகம் இடையறாது இயங்குவதற்கு. மெய்யே நிலைபேறாய் விளங்கும் முழுமுதற்பொருளை அடிநிலையாகவுள்ளது அஃது இரு கூறுகளையுடைய இறைமையாகும், இதனை உட்கோளாகக் கொண்டு அபிராமி சமயம். உலகியல் நடைபெறுதற்குரிய ஆண் பெண் தத்து வத்தை, உலகினை இயக்கும் இறைவனும் இறைவியும் இயைந்து இலங்கும் இயல்பினில் புகுத்தி. இறையுண்மையினை இருமையால் ஒருமை பெறும் சக்திச் சிறப்போடு, நிலை நிறுத்தும் வன்மை வாய்ந்தது. உயிர்களிடத்தே ஆண்மை பெண்மையிருப்பது போன்று இறையினிடமும் உயிர்கட்கு நலஞ்செய்யும் வெம்மையும் தண்மையுமுளது. வெம்மை ஆண்மையும், தண்மை, பெண்மையும் இறைபால் அம்மையப்பராகவும் சக்தி சிவமாகவும் அமைந்து சிறப்பிப்பது அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த சான்றோரது கருத்துக்கு உகந்ததாகும்.

உலகுயிர்கள்பால் கட்புலனாயதோர் அமைதித் தன்மை பொதுமையாய்த் தவழ்தல் அனுபவத்திற் கண்டறியத் தக்கது. இத் தகைய அமைதித்தன்மைதான், பொறுமை, தியாகம், இரக்கம்; அன்பு, அருள், அழகு, ஒப்புரவு, தொண்டு, முதலாய பண்பு நலங்கள் கொண்டு இயல்பாய் அமைந்த பெண்மையாகும். இப் பெண்மையில் படியுந்தோறும், ஆணும் பெண்ணும் பண்பட்ட அறிவு விளக்க மெய்தும். பெண்மை, மாந்தரிடமும் மகளிரிடமும் திகழ வேண்டப் படுவதாயினும், அஃது பெரும்பான்மையாக அமைதியும்

மனவுறுதியுமில்லாத ஆணுலகை விட்டு, மகளிருலகில் பெரிதும் சிறந்து மேன்மையுற்று, இயற்கையின் சக்திகளுக்கெல்லாம் அப்பாற் பட்டு தன்னை அடைந்தாரை பெருந்தகையராக்கும் ஒரு தெய்வ உருகொள்ளுகிறது.

இத்தகைய, தையல் நல்லாளொடு (58) சிவமும் ஒன்றி நிற்றலால் சிவமும் பெருந் தகைமை யுடையவராய் வயங்குவதும் பெறப்படும்: 'பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே' என்பது புகலி வேந்தரது புனித மொழியாதலான், அதன் அருமையினை ஓர்க. இஃதே எக்காலத்திலும் எந்நிலையிலும் நித்திய மாக மணியிடை ஒளிபோல் ஒருபடித்தாய் இருக்கும், அந்தமும் ஆதியிலாது ஆதிநாயகியாய் விளங்கும். இம் மெய்ப்பொருளின் திறத்தினை உணர்ந்தோர், அதனை அறிவின் வரம்பிற்குட்படுத்தி மெய்யுரைகளாக பல் வாறாய் விள்ளுவர். உருவாயும் அருவாயும் உலகத்தினுள்ளும் உலகத்தைக் கடந்தும் நிற்கும் இம் மெய்ப் பொருள் உலவா இன்பச்சுடர்; எக்காலத்திலும் அழியாத தன்மைய தாய் அழகு, ஆற்றல், அறிவு, அன்பு, இன்பம் ஆகியவற்றிற்கு உறைவிடம், ஆதலான் இம் மெய்ப் பொருளோடு மக்களுயிர்கள் உள்ள உறைப்புடன் உறவாடி, உள்ள ஒருமையுடன் ஒற்றுமைத் தொடர்பு கொண்டு போற்றுவது, மெய்ப்பொருளின் பேராற்றலையும் பேரன்பு முதலியவற்றையும் உள்ளவாறு உணர்ந்து அனுபவித்த தாகும் அதுபோது மெய்ப்பொருளிடத்தில் நிலைத்துள்ள சக்தி மணி யிடை ஒளிபோல் புலனாகவே, மணியிடத்தில் மனம் ஒன்றுதல்பட, மனம் ஒன்றிய மணியிடத்தில் தெய்வீக சக்தி ஒளியினை அன்பால் இடையறாது காணும் தன்மையினை மனம் பெற்று, அண்டங்கள் யாவும் சிவசக்திமயமாய் இணைபிரியாது வயங்குவதையும் இயங்கு வதையும் உணரும். எனவே அறியாமையிற்பட்டுழலும் உயிர்க ளுக்கு அருட் சக்தியோடு கூடிய சிவம் அவலத்தைக் கெடுத்து, முத்தியின்பத்தை அளிக்குமென்பது பெற்றும் உயிர்களை ஆட் கொள்ளும் முறையோடு சக்தி மெய்ப்போத வடிவமாய் பெருங் கருணைத் திறனுடன் சிவனிடைப் பிரியாசேயிழையாகவும், பிரமன் வியக்கும் கலைமகளாகவும், மால் போற்றும் திருமகளாகவும் இருந்து உயிர்களுக்கு அருள்புரிவதால், அபிராமி சமயம் பக்திக்கும் மெய்த் தவத்திற்கும் அரண் செய்யும் சிவசக்தி நெறியினை விளக்கும் சமய மாயிற்று.

(தொடரும்)

பொருநராற்றுப்படையில் சொற்கூறுகள் (1)

பா. வீரப்பன், M.A., M. Phil.,
ஆராய்ச்சி மாணவர்,
தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

கலைஞன் இருளில் கூவும் குயில்; அவனது பாடல் இருள் தனிமை தணிக்க வரும் இனிய இசை; அவனுடைய ரசிகர்கள் இருளில் ஒலிக்கும் இன்ப ஒலி தேடிவந்து ஏன் எதனால் என அறியாது என்புருகுவர் என்கிறான் ஆங்கிலக் கவி ஷெல்லி (2) ஏன் எதனால் என அறிய முயலுகின்றார் சிலர். இம்முயற்சி தொடக்க காலத்திலிருந்தே நடைபெற்று வருகிறது. கிரேக்க ரோமர்களின் இவ்வாய்வினை Rhetoric என்கிறது ஆங்கிலம். இதனை இலக்கிய ஆக்க உத்திகளும் விவரிப்பு மற்றும் விதி ஒழுங்கமைவுகளும் என விளங்க வைக்கிறார் கைராடு. (3) வடமொழியாளர்கள் இதனை அலங்காரம், குணம், ரீதி, ரசக்கோட்பாடு, த்வனி எனும் பலவேறு பட்ட கோணங்களில் ஆய்வு செய்வர். இவற்றுள் கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த வாமனர் ரீதிக் கோட்பாடுகளின்படி நடையே செய்யுளினிமைக்குக் காரணம் ஆகும் என்பர்.

தமிழில் தொல்காப்பியர் தனியாக இவற்றை ஆய்வு செய்து வகுத்தும் பகுத்தும் சொல்லவில்லை எனினும் ஆங்காங்கே நடை பற்றிய செய்திகளைத் தருகின்றார். அவை இன்றைய நடையியல் கோட்பாடுகளுடனும் ஒட்டுறவுடையனவாகத் தோன்றுகின்றன. தொல்காப்பியரின் நடைபற்றிய எண்ணங்கள் ஓசைக்கே முதலிடம் தருவனவாக அமைவதையும் காணலாம். எனினும் இதனையும் Rhetoric எனப்படுகின்ற சொல்லணி வகைப் பாகுபாடாகவே கொள்ளுதல் இயலுகின்றது.

> ' அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
> நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல் '
>
> (கிளவியாக்கம் : 26)

என்ற நூற்பா சொல் அமைவு (நடை) வகையினைக் குறிக்கின்றது. இதற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர் 'நடைபெற்றியலும் எனல் வேண்டா எனின், நடை என்பது வழக்கு. வழங்கினால் மயங்காது என்பதாம்; செய்யுளுள் மயங்க வரும் என்பதாம்' எனக் குறிக்கின்றார். செய்யுளுள் மட்டும் மயங்க வரும் என்பது எதனாலோ

என்றால் செய்யுளின்பம் பயத்தல் கருதியே என நாம் கொள்ள வேண்டியுள்ளது. வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்தின் கருத்தும் இதனை அரண் செய்யக் காணலாம். வார்த்தைகளின் அமைவே செம்மாந்த நடைக்குக் காரணம் என்பதும் ஒரே வகையாக அமைகின்ற சொல்லமைவு கவிதையின் பயனாகிய இன்பம் தரலைக் குலைக்கும் என்பதும் அவரது கருத்தாகும். (4)

'விதிகளுடன் பொருள்களை அணுகுவது அறிவியல்; கலை மனிதனின் எண்ணங்களையும் உணர்வுகளையும் கொண்டு பொருள்களைக் காண்பது' (5) என்ற கெள்ச் சொல்லாட்சி என்பது நடையின் ஒரு கூறே; அதுவும் இன்றியமையாதது அல்ல' (6) என்றார். இருபதாம் நூற்றாண்டை இவ்வாறு தொடங்கிய இவரைத் தொடர்ந்து திறனாய்வாளர்கள் தங்களது கருத்தினைத் தந்தாலும் மொழியியல் வளர்ச்சியுடனேயே நடையில் மலர்ச்சி காணுகிறது.

நடையியல் பல வழிகளிலும் ஆய்வு செய்து வளர்ந்தாலும் அதனை நான்கு பெரும் பிரிவுகளுக்குட்படுத்தலாம். (7)

1. விவரிப்பு நடையியல் (Descriptive Stylistics)
2. ஆசிரிய நடையியல் (Genetic Stylistics)
3. படிப்போர் நடையியல் (Functional Stylistics)
4. புள்ளியியல் நடையியல் (Quantitative Stylistics)

இம்முறை அனைத்தையும் எந்த நோக்கில் பார்க்கிறோம் என்கின்ற அணுகுமுறையில் இருவகைகளாகப் பிரிக்கலாம். 1. கொடுத்த பொருளை அப்படியே ஆய்வது; 2, மொழியியல்புடன் (linguistic norm) ஆய்வது.

இவ்வகைப்பாட்டினை அடியாகக் கொண்டு சொல்நிலையில் — சொற்கள் செய்யுளில் இலக்கணக் கூறுகளின் ஆட்சி போன்ற வேற்றுச் சொற்கூறுகள் எனும் வகையுள் அடக்கிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம். இதற்குச் சிறப்பாக முடத்தாமக் கண்ணியர் இயற்றிய பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பொருநராற்றுப் படை ஆய்வுக்களமாகப் பயன்படுத்தப் பெறுகிறது.

"சீருடை நன்மொழி நீரொடு சிதறி" (பொரு 24)

இம்முடத்தாமக்கண்ணியாரின் வாக்கு நடை பற்றிய கருத்தினைத் தருவதாக அமைகிறது. இதற்கு பொ. வே. சோமசுந்தரனாரின் விளக்கம் " சீருடை நன்மொழி என்றது 'நடையிலும் ஒலியிலும் எழுத்திலும் நோக்கித் தொடையமைந்தொழுகும்' 'இசைப்பாட்டிற் கோதிய சீரும் சொல்லும் நன்கமைந்த பண் என்றவாறு எழுத்து

அசை சீர் தளை அடி முதலியன முத்தமிழுக்கும் ஒத்தலின் அங்ஙனம் கூறினரென்க. ... நீர் — இசைக்குரிய இனிமைப் பண்பு. சிதறி என்றது ஆரோசை அமரோசைகளால் பரந்துபடச் செய்து என்றவாறு''. இதனால் நல்ல சொற்கள் நல்ல ஓசையுடன் அமைந்து நடப்பது நல்ல நடை என்பது விளக்கம் பெறுகிறது எனல் தகும்.

சுருக்கம், தெளிவு, ஒலிநயம் கருதி மொழியின் முழு வளத்தினின்றும் பொறுக்கி எடுக்கப்படுகின்ற கவிதைச் சொற்கள் உரைநடைச் சொற்களினின்றும் வேறுபட்டவையே என்கிறது உலக இலக்கியச் சொல்லகராதி. (8) அவ்வாறு சுருக்கமாக தெளிவுடைய ஆழமான பொருளுடைய சொற்களைப் பொருநராற்றுப்படையில் காணுகிறோம். 'அருஅயானர் '(1) என்ற சொல்' 'புதிதுபடற் பொருட்டே யானர்க்கிளவி' (உரி. 81) என்னும் தொல்காப்பிய நூற்பாவின் பொருளை ஏற்று ஆண்டுதோறும் நெல் முதலிய புதிய பொருள் வருவாய் மிகுதியை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது. முடத்தாமக்கண்ணியார் 91 ஆம் அடியில் தவஞ்செய், மாக்கள்' என மாக்கள் எனுஞ்சொல்லை வீடுபேறு கருதாது செல்வம் வேண்டலின் அக்கருத்தினை வெளிப்படுத்தக் கைக்கொண்டிருப்பது கருதத் தக்கதாகும்.

சில சொற்களைத் திறனறிந்து பயன்படுத்தும் போக்கினையும் காணமுடிகிறது. 'நாடு செகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப, (138) எனும் அடியில் 'வளர்ப்ப' என்னும் சொல்லின் வளத்தை உரையாசிரியர் பொ. வே. சோமசுந்தரனார்'' நாட்டின் வளங்களைப் பெருக்குதலும் நாட்டின் அகலத்தைச் விரிவுறச் செய்தலுமாகிய இரண்டு செயலும் தோன்ற வளர்ப்ப என்னும் சொற் பெய்துரைத்தார்'' எனத்தந்திருத்தல் சிறப்புமிக்கதாகும். இத்திறனையேடாக்டர் இ. சுந்தரமூர்த்தி (9) அவர்கள் ''சொற்களைத் திறனறிந்து எடுத்தாண்டதால்தான் வள்ளுவர் கம்பர் போன்ற பெருங்கவிஞர்கள் நடையில் எளிமையும் திட்பமும் இனிமையும் இணைந்தும் இழைந்தும் விளங்கின; படிப்போர்க்குப் பேரின்பம் விளைத்தன'' என்கிறார்.

ஆடுப்சி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு (61)

இவ்வாறு ஒரு பொருட் பன்மொழிகளைக் கைக்கொள்ளுகின்ற போக்கும் காணப்படுகிறது. கவிஞன் தனது கருத்து செம்மையாகச் சொல்லப் பட்டுவிட்டது என மன நிறைவு கொள்ளுகின்ற வரை சொற்களை அடுக்குகிறான். பல சொற்கள் ஒரே பொருளைக் கொண்டிருப்பினும் அவைகளுள்ளும் சிறு சிறு வேறுபாடுகள் உண்டு' அவற்றையும்போக்கி நிறைவுசெய்கின்றவகையிலும் (10) பலவேறு பட்ட சொற்களைப் பயன்படுத்துகின்ற ஆர்வ உணர்வுமே (11)

பன்மொழிகளின் வருகைக்கு காரணங்கள் எனலாம்.

இப்பாடலில் ஒன்பது இடங்களில் (12) சொற்கள் அடுக்கி வருகின்றன. இவற்றுள் 'பிறர்பிறர்' (174) 'தரத்தர' (157) போன்ற சொற்கள் பொருள் ஆழம் பெற உதவி நிற்பினும் பொதுவாக இப்பாடலில் அடுக்குச் சொற்கள் ஒலிநயத்திற்கே மெருகூட்டுகின்றன என்றே கொள்ளுதல் வேண்டும்.

கவிதையில் கூட்டுச் சொற்கள் எளிமையுடையனவன்றி பெரும்பாலும் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்பது வடமொழியாளர் கருத்தாகும். (13) ஆனல் கா. அப்பாத்துரையார் (14)குறியீடுகள் பல தனிச்சொற்களாக மட்டுமே அமைவதை விட, சில தனிச் சொற்களாக மட்டுமே அமைவதை விட, சில தனிச் சொற்களின் அடிப்படையிலமைந்த திரிபுச் சொற் குடும்பங்களாய் அமைவதே மொழிக்கு வளமும் சிக்கனமும் ஒருங்கே பயக்கும்'' என்பர். இவ் வகையில் 'கோள்' என்னும் 'சொல் 'மூலே' 'தலே' எனும் சொற்களுடன் இணேந்து 'மூலேக்கோள்' (141) 'தலேக்கோள்' (142) எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'கத்திரிகை'யைக் குறிக்கும் மயிர்குறை கருவி போன்ற சொற்கள் வழங்கப்பட்டுள்ளது கண்கூடிருக்கை (15) திவவு (15) காழ் (105) துராய் (103) போன்ற சொற்கள் இன்று வழக்கிலிருந்து மறைந்துள்ளன. 'பால்புரை புரவி நால்குடன் பூட்டி' (165) நால்கு என்னும் சொல் நான்கு என்னும் சொல்லின் திரிசொல் எனக் குறிப்பிடுகின்ருர் உயைாசிரியர் பொ வே. சோமசுந்தரனுர். ஆனல் இதனே அன்றைய சொல் என்பர் எம் எஸ் பூர்ணலிங்கம்பிள்ளே (15) தெலுங்கு மொழியில் இன்றும் 'நால்கு' எனும் வழக்கு இருப்பதை நோக்க இவ்வடிவே தொல்வடிவு எனக் கொள்வது பொருத்தமுடைத்தாகத் தோன்றுகிறது.

பாடலின் ஓசைக்கு அடியாக அமைவது சொல்லின் ஓசை அமைப்பே ஆகும். 16 இவ்வகையில் சொற்கள் ஓசைக்கு ஏற்பவே அமைக்கப் பட்டுள்ளமையைக் காணலாம் சொற்கள் சேர்ந்து அசையாகும்பொழுதும் இந்நிலே பெரிதும் கருதப்பட்டுள்ளது. வெருவரு (147) உழுகொழு (117) போன்ற சொற்கள் இதற்குச் சான்று பகரும். இவ்வாறு அமைக்கப்படுகின்ற சொற்கள்செவியுடன் மட்டுமன்றி மனதுடனும் உணர்வுடனும் உறவு கொள்கின்றன.

வழக்கில் எப்படி இருப்பினும் செய்யுட்கென சிறப்பு முடிவுகள் உண்டென்பதைத் தொல்காப்பியர் தெளிவுபடுத்தியுள்ளார். ஒரே முறையில் சொற்களேப் பயன்படுத்துவதன் மூலம் நுகர்வோரைச் சலுப்படையச் செய்யா வகையில் வேறு வேறு வகையில் மொழியை

ஆள உரிமை உடையவர்கள் கவிஞர்கள், இத்தகு பிறழ்ச்சிகள் கவிதைச் சுவையை உணர்வு உயர்வை உண்டாக்கப் பயன் படுத்தப் பெறுகின்றன. தமிழ் இலக்கணங்கள் இவற்றைச் செய்யுள் மொழிக்கென உடைய சிறப்பெனக் கோடிட்டுக் காட்டுகின்றன. அவற்றைச் செய்யுள் விகாரமெனவும் மரபு வழுவமைதி எனவும் மனங்கொள்ளச் செய்கின்றன.

பொருநராற்றுப்படையில் நீக்கல் உத்திக்குச் சான்றாக 'ஆறலை கள்வர்' (21) என்பதையும் 'ஈர்க்கிடைபோகா ஏரிள வனமுலை' (36) என்பதனையும் காட்டலாம். முதலடியில் ஆறலை கள்வரும் என இருத்தல் வேண்டியதில் உம்மை செய்யுள் விகாரம் என்னும் காரணத்தால் நீக்கம் பெறுகின்றது. அதுபோன்றே 'ஈர்க்கும் இடைபோகா' என்பதில் உம்மை நீக்கல் உத்தியால் நீக்கம் பெற்றுள்ளது.

செய்யுளில் புணர்ச்சி சிறப்பு விதிகளைக் காணுகின்றது; வலித்தல் மெலித்தல் போன்ற மாற்றங்களைப் பெறுகின்றது 'குளப்புவழி' (4) எனும் சொல் 'குளம்பு வழி' எனவே இருத்தல் வேண்டும். இது வேற்றுமைப் புணர்ச்சியில் குளப்புவழி என வன்றொடராகி வந்துள்ளது. இவ்வாறே ஒன்றியான் (73) எனும் சொல்லில் உகரம் செய்யுள் புணர்ச்சியால் இகரமாக ஆகியுள்ளது இவ்வாறு ஆவதற்குக் காரணம் ஓசைநயமே ஆகும். பராஅரை (104) என்ற சொல் செய்யுட் புணர்ச்சியில் சிறப்பான சொல்லாகும். பரு அரை எனும் சொற்கள் பராரை எனப் புணர்ந்து பின்னர் அச்சொல் ஒலிநயத்திற்காக, அசை அமைப்பிற்காக அளபெடுத்து வந்துள்ளது

சில சொற்கள் மரபு வழுவமைதியாகவும் வந்துள்ளன. பராஅரை வேவை பருகென (104) எனும் தொடரில் பருகு எனும் சொல் உண்ணுதல்எனும் பொருளில் வந்துள்ளது. இதற்குக் காரணம் மொழிப்புமோனை அமைந்து ஓசையினிமை கூட்ட இச்சொல் பயன்படுவதே ஆகும். எனவே, ஓசைநயம் ஊட்டுதற்காகப் பொருள் மாற்றமுடைய சொற்களும் மரபு வழுவமைதிகளாகப் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது

மேற்கண்ட சொற்கூறுகளை வைத்துப் பார்க்கின்றபோது பொருநராற்றுப் படைச் சொற்கள் ஆழமுடையன; பல சொற்கள் வழக்கிழந்துள்ளன; ஒரு பொருட் பன்மொழிகளும் அடுக்குச் சொற்களும் இசைமை கருதி கைக்கொள்ளப் பெற்றுள்ளன. இலக்கண நிலையில் பல பிறழ்வுகள் காணப்படுகின்றன. இவை ஓசை நயத்தின் ஒட்டத்திற்காக உண்டாக்கிக்கொள்ளப்பட்டவை. எனவே, இப்பாட்டில் ஓசைநயம் தலைமையாகக் கொள்ளப்பட்டு அதற்கேற்ப

சொற்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பதும் அவ்வாறு வருகின்ற போது சொற்கள் ஆழமுடையனவாகவும் அமைகின்றன என்பது பெறப்படுகின்றன.

குறிப்புகள்

1. சொற்கூறுகள் எனும் சொல் Morphological aspects of Style எனும் பொருளில் இங்கு பயன் படுத்தப் பட்டுள்ளது.

2 A Poet is a nightingale. who sits in darkness and sings to cheer its own solitude with sweet sounds; his auditors are as men entranced by the melody of an unseen musician. who feel that they are moved and softened. yet know not whence or why?

Shelley, 'A Defence of poetry'. English critical essays Ninteeeth century. Edmund D. Jones (ed.). (Oxford University PressDelhi reissued 1971). p 110.

3. P. Guiraud 'Rhetoric and Stylistics. Current trends in Linguistics Vol. XII Part 3. Thomas A. Sebeok (ed). (Mouton, 1972). E 943.

4 But various causes might be pointed out why. when the style is manly. and the subject of some importance, words metrically arranged will long continue to impact suchs a pleasure to mankind as he who proves the extent of that pleasure will be desirous to impart The end of poetry is to produce excitement in co-existence with an overbalance of pleasure; but by the supposition. excitement is an unusual and irregular state of the mind; ideas and feelings do not, in that state, succeed each other in accustomed order.

Words worth, 'Poetry and Poetic Diction'. English critical essays Ninteenth century p. 20.

5 Sir Arthur Quiller-Couch. On the art of writing. (Cambridge University Press. London, Reprinted in Guild Books 1950). p.158.

6 " " p 162.

7. P Guiraud. 'Rhetoric and Stylistics'. Current trends in Linguistics. Vol. XII. Part 3

8. Joseph T. Shipley (ed), Dictionary of World Literary Terms (George Allen and Unwin Ltd. London 1970) p. 85

9. இ, சுந்தரமூர்த்தி, நடையியல் அறிமுகம், (அன்பு நூலகம், சென்னை' 1978), ப. 64.

10. K. Kunjunni Raja. The Language of poetry. (Karnatak Universitv Dharwad 1978), p. 70.

11. Joseph T. Shipley [ed]. World Literary Terms, P. 328

12. ஊழின் ஊழின்வாய்வெய் தொற்றி [106]
அவை யவை முனிகுவ மெலினே [107]
தன்னறி யளவையின் தரத்தர யானும் [127]
வைகல் வைகல் கைகவி பருகி [158]
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர [157]
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனக் [174]
மாமாவின் வயின்வயினெற் [180]
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி [239]

13. That (Kavya) is known as sweet which is agreeable to the ear and does not contain many compounds (Or big compound) That composition is clear whose meaning is apparent to all from the learned down to women and children.

P. V. Naganatha Sastri (ed. & Tr.). Kavyalankara of Bhamaha, (Motilal Banarasi Das, Delhi, 2nd ed. 1970), Chapter II, Verse 3.

14. கா. அப்பாத்துரை. தென்மொழி. (மலர் நிலையம், சென்னை, 1956), ப. 166.

15 M. S Purnalingam Pillai, Tamil Literature. (Munnipallam Tinnelvely 1929), p. 43.

16. Henry Bett, Some Secrets of Style, (George Allen & Unwin Ltd. London 1932) I p. 58.

இறைவன் அருளும் இயல்பு

திரு. தி. கோ. பஞ்சாபகேசன்,

திருவிடைமருதூர்.

மணங்கமழும் மலர் பூத்த தண்ணிய நீர்ப்பொய்கையிலும், அழுக்கடைந்து தீ நாற்றம் வீசும் அங்கண நீரிலும் விளங்கும் ஆகாயம் போல, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூவித ஆசையுமற்றுத் தூய பளிங்குபோல் விளங்கும் மெய்ஞ்ஞானிகள் உள்ளத்திலும், அவ்வாசைகள் நிறைந்து தூய்மையின்றி விளங்கும் அஞ்ஞானிகள் உள்ளத்திலும் நீக்கமற நிறைந்து விளங்கும் இறைவன், ஆன்மாக்களிடம் வைத்துள்ள பேரருளே திருமேனியாகக் கொண்டுள்ளவர் என்று எல்லா நூல்களுமியம்புகின்றன. ஆகையால் அவ்விறைவனைப் பெருங் கருணைத் தடங்கடல் என்று உலகம் புகழ்ந்து போற்றும். உலகத்தில் ஒரு மனிதனுடைய தயவைப் பெறவேண்டுமானால், அம்மனிதனை நாடோறும் அணுகி, அவனுக்கு விருப்பமான வழிகளில் நடந்துகொண்டு, அவன்பால் மிக்க அன்புடையவனாக ஒழுக வேண்டும். அதுபோல் உலகங்களுக்கெல்லாம் ஒரு பெருந் தனித்தலைவனாக நின்று விளங்கும் இறைவனது பெருந்தயவாகிய பேரருளைப் பெறவேண்டுமானால், அவனைப் பலவாறு வழிபட்டு வாழ்த்த வேண்டும்.

இறைவன் பாலில் நெய்போல மற்றைய இடங்களில் புலப்படாமல் இருந்தாலும், திருக்கோயிலிலுள்ள இலிங்கம் முதலிய திருவுருவம், அவனது மெய்யடியார், குருமூர்த்தி ஆகிய இடங்களில் தயிரின் நெய்போல் விளங்குபவன் ஆவான். பாலானது பசுவின் உடம்பெல்லாம் நிறைந்திருந்தாலும் அதன் மடியின் வழியாய் வெளிப்படுதல் போலவும், நிலத்தின் அடியில் நீர் எங்கும் பரந்திருந்தாலும் கிணறு தோண்டித்தானே அதை வெளியே கொண்டுவந்து பயன்படுதல் போலவும், மின்சாரம் ஆகாயம் முழுவதும் பரவி இருந்தபோதிலும் அதனை ஒரு மின்சார நிலையத்தின் வழியாகத்தானே மக்களுக்குப் பயன்படுத்தல் போலவும். அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்தும் எல்லாவற்றையும் கடந்து விளங்கும் இறைவன், குருலிங்க சங்கமம் ஆகிய இடங்களில் வெளிப்பட்டுத் தோன்றுவன். ஆதலின் அவனை வழிபடுவதற்குரிய இடங்கள் திருக்கோயிலிலுள்ள திருவுருவங்கள் முதலியனவாம்.

நமது சைவசமயத்தில், குருவையும் இலிங்கத்தையும் அடியார்களையும் ஆண்டவனாகக் கொண்டு வழிபட்டேத்தி வீடு பேறடைந்த பெரியோர்கள் பலராவர். இறைவன் அருளைப் பெற விரும்புவோன்

நாடோறும் திருக்கோயிலுக்கு நியமமாகச் சென்று, பொழுது புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்குமிட்டு, கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ ஆகிய நறுமலர்களால் மாலை புனைந்து ஆண்டவனுக்குச் சாத்தி அவனது பெரும் புகழைப் பலவாறு இன்னிசையோடு பாடித் தலையாரக் கும்பிட்டு வழிபடவேண்டும். அவ்வாறே சற்குருவையும், மெய்யடியார்களையும் கண்டமாத்திரத்தில் இருக்கை எழுந்து எதிர்சென்று வணங்கி அவர் சொல்வழி நடக்கவேண்டும். ஆண்டவன் அருளிய வேதாகமங்களில் விதித்தவை செய்து விலக்கியன நீக்கி ஒழுக வேண்டும். அவ்வாறு ஒழுகுங்கால் அவ்வடியவரது மன நிலையைப் பரிசோதிப்பான் கருதி, இறைவன் பலவித திருவிளையாடல்கள் புரிவன். மாணிக்கவாசகர் - திருநீலகண்டர் - இயற்பகை நாயனுர் - கண்ணப்ப நாயனுர் - குங்கிலியக்கலய நாயனுர் சிறுத் தொண்டர் முதலிய மெய்யடியார்களுக்குத் திருவருளல் பல வகை இடுக்கண் உண்டாக்கிப் பிறகு, அவர்கள் தம்மாட்டுப் பதித்த உண்மை அன்பை உணர்ந்து அவர்களுக்கு வீடு பேறருளினன் என்பதை மெய்யடியார் வரலாறு வழியாக அறிகிறோம். இவ்வுண்மையை அறிந்து அவனடிபணிந்து, அவன் திருவருளைப் பெருமல், உயிர்கள் பிறப்பு இறப்பாகிய பெருங்கடலில் வீழ்ந்துழல்வது பேதமையாகும். முப்பழங் கலந்த அறுசுவை அடிசில் அட்டினிதிருப்ப, அதனை உண்டு ஒருவன் தனது பசியைத் தவிர்த்துக் கொள்ளாமலிருப்பது அடிசிலின் குற்றமன்று. கொழுந்தேன் சொரிந்து நறுமலர் பூத்த செழுஞ்சோலை வழி பக்கத்திலிருக்க, அவ்வழி நடவாது, கல்லும் முள்ளும் நிறைந்த சுடுவழியில் வெயிலில் ஒருவன் நடந்து சென்று வருந்துதல் நிழலின் குற்றமன்று. கேட்டவற்றையெல்லாம் கொடுக்கவல்ல கற்பகத்தருவும், கனலும் புனலும் ஆகிய மூன்றும் முறையே தன்னை அடைந்தவர்களின் வறுமையையும், குளிரையும் தாகத்தையும் நீக்குவதாகும். அவற்றையணுகாமல் ஒருவன் வறுமை முதலியன நீங்கவில்லையென்று வருந்துதல் யாருடைய குற்றமாகும். ஆகவே நாம் எண்ணிய எண்ணியவாறே முடிக்க வல்ல இறைவனும் தன்னை மெய்யன்புடன் பூசித்துப் போற்றுவோருக்குத் தன்னுடைய பெருங்கருணையையளிப்பார். அவ்வாறு போற்ருதாருக்கு அவர் அருள் புரியார். இதனை,

"மனைவிலங்கறு மைந்தனே! கற்பக
மரங்கனல் புனல் மூன்றும்
தனையடைந்தவர் வறுமையும் சீதமும்
தாகமும் தவிர்த்தாளும்
அனைய ஈசனும் அடைந்தவர்க் கருள்
செய்வன் அகன்றவர்க் கருள்செய்யான்
இனைய குற்றங்க ளெவர் குற்ற மாகு மென் றெண்ணி
நீ அறிவாயே" என

கைவல்ய நவநீதம் கூறுகின்றது.

ஆகவே, இறைவன் திருவருளைப் பெற விரும்புவோர் ஆலயத்தில் சென்று இறைவன் திருமுன் நின்று மனம் மொழி மெய்களை இறை வழிபாட்டுக்குரியதாக்கித் திருவருளைப் பெறுதல் வேண்டும். எங்கும் நிறைந்து மறைந்திருக்கின்ற இறைவன் திருவருளைத் திருக்கோயிலின் திருவுருவங்கள் மூலம் பெறுவது எளிய முறையென்பர் பெரியோர். இறைவன் பேரருளைப் பெற்று அவ்விறைவனுடன் உள்ளம் ஒங்கிட நின்ற சமயாசாரியர்கள் நால்வர்களும், பிற நாயன்மார்களும் ஆழ்வார்களும் திருத்தலங்கள் தோறும் சென்று திருக்கோயில் வழிபாடு செய்தார்கள். கோயில்கள் தோறும் சென்று வழிபடுவோர் உள்ளத்தை ஆண்டவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு எழுந்தருளுகின்றனன் என்பதை திருமூலர்

'' நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின்; பாடிப் பணிமின்; பணிந்தபின்
கூடிநெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.''

எனத் தெளிவாகத் தெரிவிக்கின்றார்.

திருவருள் பெற்ற சிவஞான பேரருட் செல்வர்களும் நியதியாக திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டார்கள் என்று உணர்க.

பாண்டிய நாட்டின் முதலமைச்சராய்த் திகழ்ந்து, திருவருட்சார்பால் சைவத் துறையில் மூழ்கிப் பாச ஒழிவும் சிவத்துவப் பேறும் பெற்ற மணிவாசகப் பெருமான்,

'' புத்தேளிர்-கோமான் நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்.''

என்று தம் மெய்யுணர்விற் பொங்கி எழுந்த உண்மையைப் புலப்படுத்துகின்றார். மனிதனைப் புனிதனாக்குவது திருக்கோயில்கள். தெய்வ அருள் ஆற்றல் அங்கே நிரம்பி நிலவுகின்றது. திருக்கோயிற்சென்று வழிபடுவோர்களது வல்வினை முற்று மொழிந்து இம்மை மறுமை நலன்களை எளிதில் எய்துகின்றனர். ஆலய வழிபாடு அருள் நிரம்பிய ஆன்றோர்கட்கும் இன்றியமையாதது என்பதைச் சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம் தெரிவிக்கின்றது.

'' செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே.''

கான் சாயபு சண்டை

(வரலாற்றுத் திறனாய்வு)

பேராசிரியர் - சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ; எம். பில்.

(துணா ரூ மலர் அ பக்கம் 32ன் தொடர்ச்சி)

12:13 மடங்கலின் மடல் :

அப்போது கான்சாய்பு பிரட்டனுக்கு ஒரு கடிதம் எழுதியதாக இக்கதைப் பாடல் கூறுகிறது.

கடிதத்தின் செய்தி :

'' பாதர்
அனல்குண்டு புகைகுண்டு மூட்டிக்கொள் பிரட்டா
கலங்காமல் நினைத்து நானிருந்தால் — அப்போ
கர்னனென்று மனதிலே எண்ணிக்கொள் ''

என்றிருக்கின்றது.

கடிதத்தின் செய்தியால் மேலும் உளங்கொதித்த பிரட்டன் மிகக்கொடுமையான போர் செய்கின்றான். துப்பாக்கி, பீரங்கிகளின் குண்டுகள் மதுரை மக்களைத் திக்குமுக்காடச் செய்கின்றன பிரட்டனே

'' மெழுகுச்சிலே கூடாரமடித்து
மூட்டினான் பீரங்கி சொல்ல முடியாது ''

'' கோட்டைக்குள் சனம் பொறுக்காமல் — அப்போ
குபீரென்று மீனாட்சி கோயிலுக்கு வந்து ''

நின்று தவிக்கின்றனர்.

12:14 வெள்ளையர் அமைத்த சுரங்கம் :

1764 மே திங்கள் 29-ஆம் நாள் வெள்ளையரால், வெளிமுறையில் மதுரைக் கோட்டையைக் கடக்க இயலா நிலையில் மதுரைக் கோட்டை அகழியினைக் கடக்க சுரங்கம் ஒன்று வெட்டப்பட்டது '' கால் '' எனும் ஆங்கில எஞ்சினியர் அமைத்துத் தந்த சுரங்கத்தினையே பிரெஸ்டனும் புதுக்கிப் பயன்படுத்துகின்றான். அச்சுரங்கம் 28 கஜ அகலமும், 1500 கஜ நீளமும் உடையதாகும் என ஆங்கிலேயரின் குறிப்புக்கள் குறிகின்றன.

12:15 சுரங்க வழியே பிரேஸ்டன் :

ஐந்து நாள் மதுரையைக் கொள்ளையடிக்க நவாப்பின் ஆணை பெற்ற பிரெஸ்டன், தான் அமைத்த சுரங்கத்தின் வழியே மதுரைக் கோட்டைக்குள் புக எத்தனிக்கின்றான். தன் வீரர்களை, எல்லாம்

அழைத்து ஆளுக்கு ருரு பிடிவராகன் அள்ளிக்கொடுத்து, தைரியஞ் சொல்லி, உத்தியோக உயர்வு பற்றிய உறுதிகளையெல்லாம் கூறியபிறகு

"எழுநூறு சோல்ஜர்களுடனே — அப்போ
ஏணிமரம் பனிரண்டு கொண்டுவரச் சொல்லி
முந்நூறு வைக்கோல் பிரிவாங்கி — பிரட்டன்
இதமாக ரண்டுகையில் நிமிசாவை வாங்கி
நாலுமுகஞ்சோதித்துப் பார்த்து"

சுரங்கத்தின் வழியே நட்டநடு நிசியில் வருகின்ருன், வருகின்ற பிரட்டன் எவ்வளவு கவனமாக வருகின்ருன் என்பதனை மேற்காட்டிய பாடற்பகுதி விளக்குகிறது.

எழுநூறு வீரர்களுடன் அணியான வரிசையில் முன்னே வரும் பிரட்டன் அகழிக்கு அடியில் தோண்டப்பட்ட இந்நச் சுரங்கத்தில் இயல்பாகவே நீர் சுரக்குமாதலின் கீழே நீருரக்கூடிய பகுதிகளிலும், மேலே அகழியின் நீர் இறங்கும் பகுதிகளிலும் வைத்து அடைக்க எளிதில் சுமந்து செல்லக்கூடிய வைக்கோற்கட்டுகளில் முந்நூறு எடுத்துச்செல்கிறுன் மேலும் சுவரோரத்தில் அவ்வைக்கோற் கட்டு களை இட்டு ஏறுவது எளிதாதலின் அவ்வைக்கோற்கட்டுகளை எடுத்துச் செல்லுகிருன், செல்லும் பொழுது இரவுபொழுது ஆலனு ம் கானின் வீரர்களின் நடமாட்டத்தைக் கண்டு கணிக்க, "சீனிக்கண்ணுடி," ,' நிமிசா. நச்சுக்குழல்" என இப்பாடல் கூறும் பைனகுலர் (Binacular) எனும் தூரதரிகினியைக் கொண்டு கணித்துக்கடக் கின்ருன்.

12:16 வளர்த்த கடா :

பிரெஸ்டனல் ஒரு காலத்தில் வளர்ப்புமகன்போல புரக்கப்பட்ட கான், தன் வளர்ப்புத் தந்தை பிரஸ்டனேடே நேருக்கு நேரி மோத வேண்டிய சூழலமைந்துவிட்டது. கான் தயங்கினனில்லை. இரவு முழுதுங் காவல் விடிய ஐந்து நாழிகை நேரம் உள்ளபோது 'படே சாயபு' எனும் பாபா சாயபிடம் காவற்பொறுப்பினை ஒப்படைத்து உறங்குகின்ருன் கான். இந்நிலையில் பிரெஸ்டன் கோட்டையின் மேற்குத்திசை மூலக்கரையிலேறி, கொத்தளத்தினையும் கைப்பற்றி "தம்பூரு" அடித்து அறைகூவல் விடுகிருன். எழுந்த கான் வெறி மிகுந்த நிலையில் பிரெஸ்டனேடு நேருக்கு நேர் மோத ஈடுபடுகிருன் கருப்புச் சட்டை அணிந்த வெளையரின் கூலிப்படைகள் கானுல் வெட்டி வீழ்த்தப்படுகின்றன.

கானனும், அவளது பிரெஞ்சுத் துணைவர்களான மார்ச்செண்ட், பிலாமி, கோர்ட், என்ற மூவரும் அவர்தம் படைஞரும் திருட்டுத் தனமாக கோட்டைக்குள் நுழைந்த வெள்ளையரின் படையினை முழுவதாக நெருப்பினைப் போலழிக்கின்றனர். இதனைப் பாடல்

'' கொம்பைக்கு மூன்று பேருமாக— அங்கே
கொத்தளத்தின் மதிள் வழியரய் போய் நின்று கொண்டு,
அகழிவழி யிரங்கின சனத்தை— கானு
அதமாக வெட்டியே நிர்தூளி பண்ணி...... அழிக்க
'' பிணக்காடாய்ப் போச்சுதே மதுரை '' என்கிறது.

12:17 மார்பில் பாய்ந்தது:

1764 ஜுன் 26ல் கானின் போராட்டத்தை எதிர்க்க இயலா நிலையில் பிரெஸ்டன் திரும்பி பசுமலை நோக்கிப்பின் வாங்குகிறான். சினம் மிக்க கான் பிரெஸ்டனின் பின் வாங்கலை நச்சுக்குழாயின் வழியே கண்டு பிஸ்டல் எனுந்துப்பாக்கி கொண்டு, பிரஸ்டனைத் துரத்திப் பிரஸ்டனின் மார்பில் சுடுகிறான். மரணகாயமுற்ற பிரஸ்டன் எப்படியோ நவாப்பிடம் சேருகிறான். இதனைப் பாடல்

'' படைவீரன் கான்சாயபு யேறிட்டுப் பார்த்து
பிஸ்தோல் துப்பாக்கியை யெடுத்து— கான்ன்
பிலமாக்க வான்றறைத் தோட்டாவும் போட்டு
குபீரென்று பிரட்டன் மாருக்குக்— கானன்
கோபமாயையொரு பலித்தா தீர்த்திட்டானப்போ
உலைதனிலொரு குண்டு தைக்க— பிரட்டன்
உபாயமாய் பல்லக்கு மேலேறிக்கொண்டு
பசுமலைக்கு வந்த மாத்திரத்தில் ''

நவாப்பு கண்டு ''இனி பலனில்லை பாளையத்துக்கென்று சொல்லி' டாக்டர் ஒருவரை அழைத்துப் பிரெஸ்டனைக் குணப்படுத்தினால் கிராமப்பரிசு தருவதாகக் கூறி 400 பொன் கொடுத்ததாகக் கூறுகிறது அந்த '' டாகுதுரையும்'' மிகச் சிறப்பாக பிரெஸ்டனின் காயத்தை ஆற்ற முனைந்து வெற்றி காணும் நிலையிலிருக்கிறான்.

12:18 ஒன்றை ஒன்று தின்ற வெள்ளை நரி:

இந்நிலையில் வெள்ளைப் படையினருள்ளேயே பிரெஸ்டனை கொல்லச்சதி நடக்கிறது. பொறாமை உள்ளம் ஒன்று வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முனைகிறது. பிரெஸ்டனின் தலைமைப் பதவியினைக்கண்டு பொறாமைக் காய்ச்சல் கொண்டிருந்த கேமல் என்பான் பிரெஸ்டனைஏதோ நட்பு முறையில் நலம்உசாவுபவனாகச் சென்று

அவனது காயத்தில் புலி மயிரை வைத்து வரவே, புண் புரையோடிப் போகி பிரெஸ்டன் இரவு 12 மணியளவில் இறந்து போகிருன். இந்தவரலாற்று நிகழ்ச்சியினையும் இப்பாடல்

'' பிரட்டா
காயமுட்டபடுதோவென்று செல்லிக் கேட்டு
காயத்தைக் கையால தொட்டு— கேமல்
மண்வளரும் புண்வாயில் புலிமயிரை வைத்து.........
சீரான கூடாரஞ் சேர்ந்திட்டான் கேமல்''

என புண்வாயில் புலி மயிரிடப்பட்டதும், பின் அம்மயிரால், ஆறிவந்த பிரெஸ்டனின் புண் புரையோடிப் போனதையும், இறந்ததையும்

'' பிரட்டன் துரைக்குப் பட்ட காயம்— அப்போ
புண்ணுகி பொல்லாத தொந்தரவுண்டாகி
மாராட்ட மயக்கங்கண்டு— பிரட்டன்
மன்னவனிறந்தானே பனிரெண்டு மணிக்கு''

எனவும் குறிக்கின்றது.

12; 18/1 பிரெஸ்டனைக் கொன்ற ''கேமல்'' என நூல் குறிக்கும் ''கேம்பல்'' யார் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டியுளது கட்டுப்பாடும், ஒழுங்கும் நிறைந்த வெள்ளையருக்குள்ளேயே அதுவும், வந்த இடத்தில் சதி நடப்பதாக இருந்தால் இருவருக்காவது தெரியாமல் இருக்காது. ஆனல் அப்படியும் இல்லாமல் ''கேமல்'' மட்டும் தனிமனிதனைப் பழித்திட்டத்தினைச் செயலாற்றியதாகவே காணுகின்றபோது பதவிப்பெருமையோ? என எண்ணத் தோன்று கிறது. ஆனல் முன்னிகழ்ச்சிகளை எண்ணிப்பார்கின்ற போது இப்பழித்திட்டம் கானின் நன்பனாலேயே முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் புலனுகின்றது. கானிற்குத் தெரியாமலேயே கானிற்கு உதவி செய்கிருன் காம்பெல். கான் தன்னை வளர்த்துவிட்ட பிரஸ்டனைக்கண்டே சற்றுத்தயங்குகிருன் என்பதனை கானின்

''பிரட்டனெரு தலையிருக்குமானல்— அவன்
பிடிப்பாண்டா யெப்படியுந்திசை மதுரை கோட்டை
பிரட்டனுட தலைவிழுந்து போனல்— அப்போ
பருந்தெடுத்த குஞ்சல்லோ மம்முதவிசாய்பு''

என்ற கானின் வாய்மொழிகள் வற்புறுத்துகின்றன.

12; 18/2 கான் படையினரால் படுகாயமுற்ற காம்பல், கானின் அன்பிற்கு இலக்காகிய நிலையில் அவனுல் காப்பாற்றப் பட்டமையினையும், அவனது துணைவரான பிரெஞ்சினரின் உபசரிப்பினைப்பெற்று உயிர் பிழைத்தமையினையும்; முன் கடலூரில் ராபர்ட் கிளைவுடன் கான் இருந்தபோது தன்னிடம் எவ்வளவு

அன்போடு, இருந்தானே அதனிலும் மிக்க அன்போடு, தன் அவல நிலையினைக்கண்டு கண்ணீர் சிந்தி,தன்னை அவன் மடியில் எடுத்து வைத்துப் புலம்பி வெளிப்படுத்திய காட்சிகளையும் கருத்தில் கொண்ட தால்தான், அவ்வளவு ஆற்றலும், அன்பும் நிறைந்த கானை,வளர்த் திருந்தும் இன்று இந்த பிரஸ்டன் எதிர்க்கின்றானே; கொன்று போடும் அளவிற்குத் துணிகின்றானே, என நினைத்துச் சினந்து' கானிற்குத்தன் செய்நன்றியினைக்காட்டி தன் மனசாட்சிக்கு அமைதி தேடும் முறையிலும். நவாப்பின் மீது கொண்ட அவ நம்பிக்கை யாலும் மேற்கண்டவாறு பிரெஸ்டனின் காயத்தைப் புரையோடச் செய்து பலி வாங்கியிருக்கின்றான் எனக்கொள்வது பொருத்த முடையதாகவே தோன்றுகிறது.

12: 19 மதுரையில் மஞ்சள் கொடி:

பிரெஸ்டனின் தலைமையில் இயங்கிய வெள்ளைப்படைகள் தலைவனே முன்னணிக்குச் சென்று போரிடுவதைக் கண்டு முனைந்து தாக்கலாயின. கான் அஞ்சினானில்லை, உடலில் ஒரு சொட்டு ரத்தம் உள்ளவரையிலும் பகைவனுக்குப் பணியாமையை விரும்பும் மறவனாயிற்றே! மதுரையின் கோட்டையில் மஞ்சள் கொடியை ஏற்றிவிட்டுப் போரிட்டான் கான். ஆம், சாகும் வரையில் போர், எனும் முறையில் இராஜபுத்திரர்கள் போரிடுவது போலவே கானும் போரிடுகிறான். சாகத் துணிந்து விட்டான் கான். அவனது வெறியும் மிகுந்தது. பலன்; வெள்ளையரில் சுமார் 750 ஐரோப்பியரும், 2000 கூலிப்பட்டாளமும் இறந்தொழிந்தனர். மதுரை பிணக்காடாயிற்று இந்நிலையில்தான் பிரெஸ்டன் இறந்து போனான்.

12: 20 வெள்ளையரின் வெள்ளைக்கொடி:

கானால் நசுக்கப்பட்ட வெள்ளைப்படை மறுநாள் வெள்ளைக் கொடியினைப்பறக்க விட்டு அமைதி வேண்டிற்று. கானும் ஒருப் பட்டான். இறந்த வீரர்களின் உடலங்கள் இருதரப்பினராலும் எடுத்துச் செல்லப்பட்டது. அன்று பெருமழை பொழிந்தது. தொடர்ந்து அமைதி நிலவிற்று. கான் இவ்வமைதி நாட்களைப் பயன்படுத்திக் கொண்டான். இடிந்த கோட்டைச்சுவர்களை பலமாக எடுத்துக்கட்டி, அகழிகளை ஆழமாக்கிக் கொண்டான்.

13: 00 துணைவர்களின் பிரிவு:

இவ்வமைதிக்கால முதல் கானின் வீழ்ச்சி தொடங்கிற் கானின் இருகரங்களாக நின்று உதவிய பிரெஞ்சுத்தளபதி மார் டி மாதவ்வும், பிலாமி கோர்ட்டும், தங்கள் தாயகமாம் பிரான்

"எக்ஸ்பெடிஸன் பிடிகேடியர்'' எனும் கப்பலில் புறப்பட்டுச்சென்று விட்டனர். கானின் உற்ற நண்பர்கள் பிரியும் வேளையில், முற்றுகை யிட்டுள்ள வெள்ளைப்படையினருக்கு உதவிப்படை மிகப்பெரிய நிலையில் ஆற்காட்டு நவாப்பாலும், சென்னைக் கும்பினித்தலைமை யாலும் அனுப்பி வைக்கப்படுகிறது.

13; 01 வெள்ளையர் எழுச்சி:

மதுரையினை முற்றுகையிட்டுள்ள வெள்ளைப்படை வலுக்கிறது. கானின் படையோ கோட்டைக்குள்ளேயே அடைந்து கிடப்பதால் வலுவிழக்கிறது. வெள்ளையர் 18 பவுண்டு பீரங்கிகளை நிரம்பப் பெற்று கோட்டையைத் தகர்த்த தயாராகி விட்டனர். கான் நண்பர்களின் பிரிவினாலும், தன் வீரர்களின் வலுக்குறைவினாலும் மனமழிகின்றான்.குழம்புகின்றான், இருமாதங்கள் இந்நிலையிலேயே கழிகின்றன.

14: 00 கானும் கலங்குகின்றான்:

அச்சுறுத்தும் நிலையில் வெள்ளைப்படை பெருகிவிட்டது. சண்டையிலேயே தன் வாணாளில் ஒவ்வொரு நாளையும் கழித்த கான் வெள்ளையரின் படைப் பெருக்கத்தினையும், தன்னிலையும் கண்டு தனக்கு இனிதோல்வி முகம்தான் என்பதனைத் தீர்மானித்து விட்டான். எனவே தானும் தன் குடும்பத்தினரும் தப்பித்தால் போதும் என எண்ணுமளவிற்குக் குழம்பி விடுகின்றான். திண்டுக்கல்லிற்குத் தான் செல்ல அனுமதி வேண்டி ஆங்கிலேயப் படைத்தளபதிக்குக் கடிதம் எழுதுகிறான் ஆங்கிலர் மறுத்து விடுகின்றனர். கானின் சுயநலம் குறித்து அவனது உற்ற நண்பர் களான மார்ச்சென்ட், பாபாசாகிப், ஸ்ரீனிவாசராவ் முதலியோர் அவன்பால் வெறுப்புக் கொள்கின்றனர்.

14: 01 கான் கலங்கிய நிலையில் தன் முரணிய கட்டளைக்கும், சொற்களுக்கும் ஒருப்படாதவர்களையும், தன் கருத்திற்கு மாறு பட்டிருப்போரையும், அவர் யாராக இருந்தாலும், ஒறுக்க ஆரம்பித்து விட்டான். ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு எனும் பொய்யாமொழி நிருபனமாயிற்று. தன் பித்த நிலையால் கோட்டைக்குள்ளேயே தன் அருமை நண்பர்களையே பகைத்து விட்டான். ஒருகால் மார்ச் சென்ட்ஐ குதிரைச் சவுக்கால் அடித்து அவமானப்படுத்தி விட்டான்.

தொடரும்.